மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ. 5-6 கிலோ மீட்டர் மற்றும் கி.மீ. 0-1 ஆகிய இரண்டு கிலோ மீட்டர் நீளத்திற்கு தார் போடும் வேலை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கிலோ மீட்டர்தான் போடுகிறார்கள். ஏற்கெனவே 3 பேருந்துகள் செல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை அரசு முடித்துக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதனுடைய மதிப்பீடு 7 இலட்சம் ரூபாய். சுமார் 13 கிலோ மீட்டர் தூரம் கற்சாலை உள்ளது. இந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்து, வேலையை முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

கிராமப் புறங்களில் அளிக்கப்படும் ஆங்கிலமுறை மருத்துவம்.

*வினா எண் 54—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பல இடங்களில் ஓமியோபதி, சித்தா போன்ற மருத்துவ பட்டத்தை பெற்று, ஆங்கில முறைகளை பயன்படுத்தி கிராமப் புறங்களில் மருத்துவம் செய்து வருகிறார்களோ, இதற்கு சட்டம் இடம் தருகிறதா?

(ஆ) இல்லையெனில் எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) 1970 முதல் எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆங்கில முறை மருத்துவத்துடன் இந்திய முறை மருத்துவத்தையும் இணைத்து பயின்று (Integrated medicine) ஒருங்கிணைந்த மருத்துவக் கழகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் மட்டுமே ஆங்கில முறைகளை பயன்படுத்த சட்டம் இடம் தருகிறது.

(ஆ) புகார் ஏதும் வராததால் இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) எழாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களிலே சூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டு ஹோமியோபதி பட்டம் பெற்றவர்கள் தங்களை எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு கிராம மக்களை ஏமாற்றுகின்ற வகையிலே வைத்தியம் செய்து வருவது மருத்துவ சட்டப்படி குற்றமாகாதா? அதற்கான சட்டம் இல்லையென்றால் கடுமையானதொரு சட்டத்தைக் கொண்டு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக் கேள்விகள் 1970 ஆம் ஆண்டு முதல் எவ்வளவு புகார்கள் வந்திருக்கின்றன என்று கேட்கப்பட்டது அதற்கு புகார் எதுவும் வரவில்லை என்று பதில் சொல்லி இருக்கிறேன் ஆகவே குறிப்பிட்டு எந்த இடத்திலாவது இப்படி நடந்து அது நமது கவனத்திற்கு வந்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஹோமியோபதி, சித்த வைத்தியம் போன்றவற்றை அரசு ஊக்குவிப்பதன் காரணமே பழமையான மருத்துவ முறைகள் அழியாது காக்கப்பட வேண்டும் என்பதால்தான். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஆங்கில மருந்துகளை வழங்குகிறார்கள். எங்கெங்கு இந்த மாதிரியாக நடந்து வருகின்றன என்பதைக் கண்டறிய எம்.எல்.ஏ-க்களைக் கொண்ட குழுக்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இதனைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று அரசினுடைய அதிகாரிகளிடத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

திரு. க. அன்பழகன்: சித்த மருத்துவ முறையும், ஹோமியோபதி மருத்துவ முறையும் அரசாங்கத்தாலே ஊக்கப்படுத்தி வளர்க்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும்கூட உரிய முறையிலே ஹோமியோபதி மருத்துவமும், சித்த வைத்தியமும் வளர வழி செய்யப்பட வேண்டும். அப்படி வளர்ப்பது மூலமே அப்படிப்பட்ட மருந்துகளைத்தான் வாங்க வேண்டும் என்ற மனப்பான்மை பொது மக்களிடத்திலே ஏற்படும். ஆனால் இன்னும் சரியான வழி செய்யாத காரணத்தாலேதான் பொதுமக்களின் மனப்பான்மை காரணமாக இந்த மாதிரி காரியங்களைப் பலர் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஏற்கனவே அரசாங்கம் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த வைத்தியர்களை நியமிக்க வேண்டும்; ஹோமியோபதி மருத்துவர்களை அரசாங்க மருத்துவ மனைகளிலே நியமிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறபடி அவர்களை எல்லாம் நியமித்து அதன்மூலமாக அந்த மருத்துவர்களுக்கு மரியாதை ஏற்படுகின்ற வகையிலே அரசு உடனடியாகக் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, புதியதாக 186 பி.எச்.எஸ்.-ல் சித்த பிரிவினைத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஜி.ஓ.கூட இஷ்யூ செய்து 186 இடங்கள் எவை எவை என்பது பற்றிகூட அறிவிப்புச் செய்து விட்டோம். இது நிச்சயமாக மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கும் என்று கருதுகிறேன். எங்கெங்கு அரசாங்கத்திற்குச் சொந்தமாக

கட்டிடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. அடுத்து 3 மருத்துவர்கள் இருக்கிறார்கள். இப்போது நான்காவதாக ஒரு மருத்துவரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே இது உடனடியாக நடைபெறும் என்பதையும் நம்முடைய பேராசிரியர் அவர்களின் கேள்விக்குப் பதிலாகசொல்கிறேன். எங்கெங்கு அரசிற்குச்சொந்தக் கட்டிடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்த 186 இடங்களில் அந்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்தி இருக்கிறோம். சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே கட்டிடங்கள் கிடைக்கின்றபோது விஸ்தரிப்பு செய்யப்படும். ஹோமியோபதியைப் பொறுத்தவரையில் இதுவரையில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டுதான் 6 இடங்களில் ஹோமியோபதி மருத்துவம் படித்திருக்கக்கூடிய மருத்துவர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. ஆகவே இந்த இரண்டு பிரிவுகளுக்கும் நல்ல வகையிலே ஊக்கம் கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 186 இடங்களிலே சித்த வைத்தியம் ஆரம்பிப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக சொன்னார்கள். நன்றி. ஆனால் 1970 ஆம் ஆண்டு முதல் ஒரு புகார் கூட வரவில்லை என்று சொல்கிறார்கள். மதுரையிலே ஹோமியோபதி நிலையம் ஒன்றை ஒரு தனியார் நடத்தி வருகிறார். அங்கே பயிற்சி பெறுவதற்காக வருகின்றவர்களுக்கு 8 தினங்கள் தான் பயிற்சி தரப்படுகின்றது. அப்படி 8 தினங்கள் பயிற்சி பெற்றவர்கள் டாக்டர் ஆர்.எச்.எம். என்று போட்டுக் கொண்டு ஊசி போடுகின்ற வேலையைக்கூட செய்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த வகையிலே சமீபத்தில் ஒருவருக்கு அப்படி ஊசி போட்டதில் செப்டிக் ஆகி கையையே எடுக்கின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது. இது குறித்து புகார் செய்தும்கூட இதற்கு ஒரு சட்டம்கூட இல்லை. கேட்டால் அவர்களிடம் ஒரு சர்டிபிகேட் இருக்கின்றது. ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. வேறு வழி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே புகார் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்டவர்களைத் தடை செய்து உண்மையிலே நன்கு பயிற்சி பெற்றவர்களை நியமிக்க அரசு முன்வருமா? அதற்காக சட்டம் கொண்டுவர முடியுமா? கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய 19 4 என்ற அந்தச் சட்டத்தின்படி உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட மருத்துவ அதிகாரியிடத்திலேயும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடாத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள் என்றுகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த

மாதிரியான நிலைமைகள் வருகின்றபோது நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஏற்கனவே 3 டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும் கட்டிடங்கள் உள்ள இடங்களில் புதிதாக சித்த வைத்தியம் பயின்ற டாக்டர் ஒருவரை 4 வதாக நியமிக்க முடிவு செய்திருக்கிறோம் என்றும், பதில் அளிக்கும்போது கூறினார்கள். ஆனால் ஏற்கனவே கட்டிடங்கள் இருக்கிற பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில், தமிழ்நாட்டில் அதுவும் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில், ஆங்கில மருத்துவ டாக்டர்களே இல்லை என்கிற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? உத்தரவு இருக்கிறது ஆனால் அதை நிறைவேற்றுவதில்லை. அப்படித்தான் இந்த நியமனங்களிலும் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்? (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சித்த வைத்தியர்கள் ஆங்கில மருத்துவத்தைப் பயன்படுத்துவது பற்றி. வடஆற்காடு மாவட்டத்தில் ஆங்கில மருத்துவ டாக்டர்கள் இல்லை என்று கேள்வி கேட்டால் எப்படி? மூலக் கேள்வியோடு ஒட்டிக் கேளுங்கள்.

திருப்பூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 55 திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக திருப்பூர் மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த மருத்துவமனையில் உள்ள மொத்த படுக்கைகள் எவ்வளவு? மருத்துவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள படுக்கைகள் .. 104
அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் 24

திரு. ஆர். மணிமாறன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக திருப்பூர் மருத்துவமனை ஆக வேண்டும் என்று அங்குள்ள மக்கள்நீண்ட நெடுங்காலமாக கேட்டு வந்தார்கள்